முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 628 / 2023

<u>வா.சா.1 / ஹேமலதா /12.08.2025</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு வழக்கு பற்றிய முழு விவரம் தெரியும். வழக்கு கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்று கேட்டால் 27.06.2022ம் தேதி பதிவு செய்யப்பட்டது. எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் அது பதிவு செய்யப்பட்டது என்றால் நெருப்பெரிச்சல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பதிவு செய்யும் போது பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்று கேட்டால் ரூபாய் 2 இலட்சம் கொடுக்கப்பட்டது. அப்போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் எனது கணவர், அவரது அக்கா மகன் அர்ஜுன், கனகராஜ் மற்றும் அவரது மனைவி மற்றும் அவர்களது மகன் ஆகியோர் உடனிருந்தார்கள். நான் எந்த தேதியில் வழக்கறிஞர் அனுப்பினேன் என்பது ஞாபகம் இல்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராதிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் யார் யார் கிரய ஒப்பந்தம் பதிவு செய்யும் போது உடனிருந்தார்கள் என்பதை தெரிவித்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வங்கியில் எவ்வளவு செலுத்தப்பட்டது என்று கேட்டால் ரூபாய் 42 இலட்சம் செலுத்தினேன். யாருடைய வங்கி கணக்கில் அவ்வாறு செலுத்தப்பட்டது என்று கேட்டால் ஸ்ரீராம் பைனான்ஸ் வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டது. அந்த பணம் யாருடைய வங்கி கணக்கில் இருந்து அவ்வாறு செலுத்தப்பட்டது என்று கேட்டால் என் கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்து சத்யா காலனியில் அமைந்துள்ளது. நான் அதை பார்த்துள்ளேன். அதன் அளவுகள் மற்றும் எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரயம் எழுதிக்கொள்வதாக கூறப்படும் நிலையில் ஏன் அளந்து பார்க்கவில்லை என்று கேட்டால் என் கணவர் அதை கவனித்துக்கொண்டார். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயம் என் வசம் எவ்வளவு ஆவணங்கள் பிரதிவாதியால் கொடுக்கப்பட்டது என்று கேட்டால் சுமார் 8 ஆவணங்கள் என் வசம் கொடுக்கப்பட்டது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் ஒரு வாரத்தில் கிரயம் எழுதி கொள்ள ஒப்புக்கொண்ட பிரதிவாதி வேறு ஒரு நபருக்கு விற்க முயற்சி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார்

அவ்வாறு சொன்னார்கள் என்று கேட்டால் பிரதிவாதி கனகராஜின் மகன் கார்த்தி தான் அவ்வாறு சொன்னார். கனகராஜை இதற்கு முன்பு பார்த்துள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் கேட்டுக்கொண்டபடி பிரதிவாதி நான் சொன்ன தேதி நேரத்தில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்தாரா என்று கேட்டால் இல்லை. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் க்கு நான் செலுத்திய ரூபாய் 42 இலட்சம் போக வேறு யாருக்கு பணம் கொடுத்தேன் என்று கேட்டால் கரூர் வைஸ்யா வங்கிக்கு ஒரு இலட்சமும், மணிவண்ணன் என்பவருக்கு ரூபாய் 5 இலட்சமும் கொடுக்கப்பட்டது. இதற்கு முன்பு நான் வேறு சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம். அவ்வாறு கிரயம் வாங்கும்போது ஆவணங்களை சரிபார்த்து வாங்கினேனா என்றால் அதை என் கணவர் தான் கவனித்துக்கொண்டார். இவ்வழக்கு பற்றிய விவரங்கள் முழுவிவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்கண்டாவறு மணிவண்ணனுக்கு ரூபாய் 5 இலட்சம் கொடுத்ததாக அதில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். காரணம் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மணிவண்ணனுக்கும் ரூபாய் 5 இலட்சம் கொடுக்கவேண்டியிருந்தது எனக்கு தெரியவந்து அது செலுத்தப்பட்டது. கிரய ஒப்பந்தத்திற்கு முன்பாக வில்லங்க சான்று பார்க்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி மணிவண்ணன் எந்த வருடம் தாவா சொத்தை Attachment க்கு மனுதாக்கல் செய்திருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.21 ஆவணங்கள் நான் ஸ்ரீராம் பைனான்சில் இருந்து வாங்கியது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் பிரதிவாதியான கனகராஜ்தான் ஸ்ரீராம் பைனான்ஸ்க்கு பணம் செலுத்த வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ள வாசகங்களை நான் படித்து பார்க்கவில்லை என்று சொன்னால் நான் படித்து பார்க்கவில்லை என் கணவர் படித்து அதில் கண்டுள்ள விவரங்களை எனக்கு சொன்னார். என் கணவர் கம்பெனி வைத்துள்ளார். அவருக்கு வேறு தொழில் இல்லை. வா.சா.ஆ.2 பிரதிவாதி பெயரில் உள்ள அசல் கிரய பத்திரம் என்றால் சரிதான். அதில் கண்டுள்ள கையொப்பமும் வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பமும் ஒரே மாதிரியாக உள்ளதா என்று கேட்டால் ஆமாம். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ளவாறு பிரதிவாதி கனகராஜ் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் அவரது கையொப்பத்தை வழக்கிற்காக

நாங்களே மோசடியாக செய்துள்ளோம் என்றும் என் கணவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்றும் பிரதிவாதியின் மகன் கார்த்திக் என் கணவரிடம் கடன் வாங்கியிருந்தார் என்றும் அதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் உண்மையாக இருந்திருந்தால் அது எழுதுவதற்கு முன்பாக வில்லங்க சான்று எடுத்து பார்த்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் காணப்படும் பிரதிவாதியின் கையொப்பத்தையும், வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் உள்ள அவரது கையொப்பத்தையும் ஒப்பீடு செய்ய ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் 15 நாட்களில் கிரயம் செய்து கொடுக்காத காரணத்தினால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அதுபோல தடங்கல் மனு ஏதாவது சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் அவ்வாறு கொடுக்கப்பட்டது என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு தடங்கல் மனு கொடுத்ததாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலியாக கிரய ஒப்பந்தம் தயார் செய்து அதில் மோசடியாக நாங்களே பிரதிவாதியின் கையொப்பம் போல் கையொப்பம் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.08.12 20:02:39 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.